DEPOSITON OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | |
|---|---|
| Calender | } |
| Miscellaneous | } |
| Preliminary Register | } |
| Sessions | } Case No.SC. 178/2022 |

| | |
|---|---|
| Deposition of Witness | { PW 5 |
| | { Prosecution |
| | { |
| Name | : சுரேஷ் |
| Father's Name | : த/பெ. நடேசன் |
| Taluk | : சங்ககிரி |
| Calling | : -- |
| Religion | :இந்து |
| Age | :48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.08.2023.

2023ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.5ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

1 முதல் 3- ஆம் எதிர்கள் ஆஜர்

**முதல் விசாரணை**

நான் ஆவரங்கபாளையத்தில் வசிக்கிறேன். நான் சொந்த தொழில் செய்கிறேன். கடந்த 06.07.2020- ஆம் தேதியன்று மதியம் சுமார் 2 மணிக்கு நானும், என் நண்பர் சிவபிரகாஷ்ம் மேஸ்திரி காட்டிலுள்ள சிவபிரகாஷ் வீட்டில் திருச்செங்கோடு செல்லுவதற்காக தயாராகிக்கொண்டிருந்தோம். அப்போது சங்ககிரி காவல்நிலையத்திலிருந்து போலீசார் அங்குவந்து அடி, தடி வழக்கு சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தார்கள். பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்யும் படி போலீசார் எங்களிடம் கேட்டார்கள். பின்பு நானும், சிவபிரகாஷ்ம் பார்வை மகஜரில் சாட்சி

கையெழுத்து செய்தோம். நான் சாட்சி கையொப்பம் செய்த பார்வை மகஜர் அ.சா.ஆ-2 ஆகும். அதன் பின்பு நானும், பிரகாஷ்ம் திருச்செங்கோடு சென்றுவிட்டோம். அதன்பின்பு அன்று மாலை சுமார் 7 மணிக்கு சங்ககிரி போலீசார் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு சங்ககிரி காவல் நிலையம் வரச்சொன்னார்கள். அதனால் நானும், சிவபிரகாஷ்ம் உடனடியாக காவல்நிலையம் சென்றோம். அங்கு ஆய்வாளர் என்னை விசாரித்துவிட்டு அன்று மதியம் எழுதியதை படித்துக்காட்டி கையெழுத்து வாங்கினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1-வது கையெழுத்து என்னுடையதுதான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் அ.சா.ஆ-3 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அதிலுள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் அ.சா.ஆ- 4 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோள் படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டத்தின் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 06.07.2020- ஆம் தேதியன்று மாலை சுமார் 6.30. மணிக்கு நானும், சிவபிரகாஷ்ம் மேற்படி வழக்கு தொடர்பாக எதிரிகளை போலீசார் கைது செய்து வைத்திருப்பதாக கேள்விப்பட்டு காவல் நிலையம் சென்றதாகவும் அப்போது போலீசார் கைது செய்து வைத்திருந்த எதிரி வினேத்குமார் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அந்த வாக்குமூலத்தை சங்ககிரி காவல் ஆய்வாளர் மாலை 6.45 மணிக்கு பதிவு செய்து கொண்டதாகவும் அதில் நானும், சிவபிரகாஷ்ம் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் அதன் பின்பு எதிரி வினேத்குமார் அ.சா.1 ஐ குத்த பயன்படுத்திய கத்தியை தனது வீட்டிற்கு பின்னால் புதரில் மறைத்து வைத்திருப்பதாகவும் தன்னை அழைத்து சென்றால் அதை எடுத்து கொடுப்பதாக சொன்னதால் எதிரியுடன், எங்களையும் காவல் ஆய்வாளர் வினேத்குமார் வீட்டிற்கு அழைத்து சென்று அவர் சம்பவத்தின்போது பயன்படுத்திய கத்தியை எதிரி எடுத்து ஆஜர் செய்ய ஆய்வாளர் மகஜரில்

கைப்பற்றியதாகவும்  அதில் நானும், சிவபிரகாஷ்ம் சாட்சி கையொப்பம்

**-2-**

செய்தோம் என்றும் போலீசார் விசாரணையில்போது சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

ஒம்/- சுரேஷ் ஒம்/-திரு. ந. பன்னீர்செல்வம்,

சார்பு நீதிபதி, சங்ககிரி